Journalists for Democracy in Sri Lanka

**பத்திரிகை அறிக்கை**

22 ஜுலை, 2009

**இலங்கை: தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியில் ஊடகவியலாளர்களும் ஊடகப்பணியாளர்களுமாக 34 பேர் படுகொலை.**

போர் முடிவடைந்து அரசாங்கத்தினால் போர் வெற்றிப் பிரகடனம் செய்யப்பட்ட பின்னரும் கூட, ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்படும் சம்பவங்களும் மிரட்டி அடக்கப்படும் கொடூர நிகழ்வுகளும் அதிகரித்து வருவதையிட்டு இலங்கையின் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் (ஜேடிஎஸ்) தமது ஆழ்ந்த கவலையையும் அக்கறையையும் வெளியிட்டுள்ளனர். இச்சம்பவங்கள் காரணமாக இலங்கை மக்களுடைய தகவல் அறிந்து கொள்ளும் உரிமை பறிக்கப்படுவது மாத்திரமின்றி ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு சுயதணிக்கையைக் கடைப்பிடிக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

இந்த அரசாங்கம் ஆட்சிபீடமேறிய நாளிலிருந்து எவ்விதமான நீதி நடைமுறைகளுமின்றி ஊடகவியலாளர்களும், ஊடகப் பணியாளர்களுமாக முப்பத்திநான்கு பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை கடும் கோபத்துடனும் ஆழ்ந்த கவலையுடனும் இலங்கையின் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்புத் தெரிவித்துக் கொள்கிறது.

படுகொலை செய்யப்பட்ட இந்த 34 பேரில் மூன்று பேர் சிங்கள ஊடகவியலாளர்கள் ஆவர். ஒருவர் முஸ்லிம். ஏனைய 30 பேரும் சிறுபான்மைத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். படுகொலை செய்யப்பட்ட 34 ஊடகவியலாளர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதற்கும் மேலாக ஊடகவியலாளர்களும் ஊடகப்பணியாளர்களுமான 10 பேர் கடத்தப்பட்டுள்ளார்கள். ஊடகவியலாளர் ஜெயப்பிரகாஷ் திஸ்ஸநாயகம், அவரது அச்சக உரிமையாளரான வெற்றிவேல் ஜசிகரன், ஜசிகரனுடைய துணைவியாரான வடிவேல் வள்மதி ஆகியோர் கைது செய்யப்பட்டுக் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தீர்வுகாணப்படாத இந்தப் படுகொலைகளும் கடத்தல்களும் குற்றவாளிகள் தண்டிக்கப்படாத ஒரு நிலைமை இலங்கையில் சாதாரணமாகி விட்டதனை எடுத்துக் காட்டுகின்றது.

2004இல் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பிரதமராக இருந்த காலத்தில் தான் தற்போது ஆட்சியிலிருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்தது. இவ்வளவு குறுகிய காலத்துள் இவ்வளவு பெரும் தொகையான ஊடகவியலாளர்களும் ஊடகப்பணியாளர்களும் கொல்லப்பட்டது இலங்கையின் வரலாற்றில் முன்னொரு போதும் இல்லாதது.

இதேகாலப்பகுதியில், ஊடகவியலாளர்களுக்கும் ஊடகப்பணியாளர்களுக்கும் எதிரான மிரட்டல்களும், அச்சுறுத்தல்களும் குறைவடையாது தொடர்ச்சியாக அதிகரித்தே வந்துள்ளன. இதன்விளைவாக இந்தக் கொடுமைகளுக்கு அஞ்சி 50க்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் இலங்கையை விட்டுப் புலம் பெயர்ந்துள்ளனர்: ஒஸ்ரியா 01, ஒஸ்ரேலியா 01, கனடா 03, டென்மார்க் 01, பிரான்ஸ் 12, ஜேர்மனி 04, இந்தியா 05, மலேசியா 01, நெதர்லாந்து 02, நேபாளம் 02, நோர்வே 02, சுவிற்சர்லாந்து 16, ஐக்கிய இராச்சியம் 10, ஐக்கிய அமெரிக்கா 02.

இலங்கையில் ஊடக சுதந்திரம் எதிர்கொள்ளும் நெருக்கடியைத் தணிக்கும் முகமாக பத்திரிகைச் சுதந்திரத்திற்கான சர்வதேசக்குழுவினால் முன்வைக்கப்பட்ட 11 அம்சத்திட்டத்தினை இலங்கையின் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு ஆதரிக்கிறது. இலங்கையின் எல்லா மக்களும் ஜனநாயக மற்றும் மனித உரிமைகளை அடைய வேண்டி நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள எல்லா வகையான ஜனநாயக சக்திகளுடனும் இணைந்து பணியாற்றும் எனவும் அது உறுதியளிக்கிறது.

நடைமுறைச்சாத்தியமான எல்லாவகையான வழிமுறைகளுடாகவும் சட்டத்திலிருந்து விலக்களிக்கப்படும் படுகொலைக் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வரவும், இக்கொடூரங்களுக்குக் காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்தவும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க முன்வருமாறு இலங்கையின் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர் அமைப்பு ஐக்கிய நாடுகள் சபையையும், ஏனைய அரசாங்கங்களையும் மற்றும் அமைப்புக்களையும் வேண்டிக் கொள்கிறது.

இலங்கையில் ஒடுக்குமுறைக்கு அஞ்சி நாட்டை விட்டு வெளியேறிய ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், மனித உரிமைக் காப்பாளர்கள் மற்றும் கலைஞர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு செயலணிக்குழுவே இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பாகும். இது இலங்கையின் ஊடக சுதந்திரத்திரம், மனித உரிமைகள், ஜனநாயகம் என்பவற்றைப் பாதுகாக்கும் நோக்கில் அவற்றைப் பிரச்சாரப்படுத்துவதற்காக அண்மையில் ஐரோப்பாவில் கூடியது.

**நிறைவேற்றுக் குழு**

**இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள்**

Journalists for Democracy in Sri Lanka

இணைப்பு :

**படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்களுடைய பட்டியல்**
**ஏப்ரல் 2004இல் இருந்து பெப்ரவரி 2009 வரை**

**2004**

| | | | |
|---|---|---|---|
| 1. | அய்யாத்துரை நடேசன் | ஊடகவியலாளர் | மே 31 |
| 2. | கந்தசுவாமி ஐயர் பாலநடராஜ் | எழுத்தாளர் | ஓகஸ்ட் 16 |
| 3. | லங்கா ஜயசுந்தர | புகைப்படத்துறை ஊடகவியலாளர் | டிசம்பர் 11 |

**2005**

| | | | |
|---|---|---|---|
| 4. | தர்மரட்ணம் சிவராம் | ஆசிரியர் | ஏப்ரல் 28 |
| 5. | கண்ணமுத்து அரசகுமார் | ஊடகப்பணியாளர் | ஜுன் 29 |
| 6. | ரேலங்கி செல்வராஜா | ஊடகவியலாளர் | ஓகஸ்ட் 12 |
| 7. | டி.செல்வரட்ணம் | ஊடகப்பணியாளர் | ஓகஸ்ட் 29 |
| 8. | யோககுமார் கிருஷ்ணபிள்ளை | ஊடகப்பணியாளர் | செப்ரம்பர் 30 |
| 9. | எல்.எம்.பளீல் (நற்பிட்டிமுனை பளீல்) | எழுத்தாளர் | டிசம்பர் 02 |
| 10. | கே.நவரட்ணம் | ஊடகப்பணியாளர் | டிசம்பர் 22 |

**2006**

| | | | |
|---|---|---|---|
| 11. | சுப்ரமணியம் சுகிர்தராஜன் | ஊடகவியலாளர் | ஜனவரி 24 |
| 12. | எஸ்.ரி.கணநாதன் | உரிமையாளர் | பெப்ரவரி 01 |
| 13. | பஸ்ரின் ஜோர்ஜ் சகாயதாஸ் | ஊடகப்பணியாளர் | மே 03 |
| 14. | ராஜரட்ணம் ரஞ்சித்குமார் | ஊடகப்பணியாளர் | மே 03 |
| 15. | சம்பத் லக்மால் டி சில்வா | ஊடகவியலாளர் | ஜுலை 02 |
| 16. | மரியதாசன் மனோஜன்ராஜ் | ஊடகப்பணியாளர் | ஓகஸ்ட் 01 |
| 17. | பத்மநாதன் விஸ்மானந்தன் | பாடகர், இசையமைப்பாளர் | ஓகஸ்ட் 02 |
| 18. | சதாசிவம் பாஸ்கரன் | ஊடகப்பணியாளர் | ஓகஸ்ட் 15 |
| 19. | சின்னத்தம்பி சிவமகாராசா | ஊடக உரிமையாளர் | ஓகஸ்ட் 20 |

**2007**

| | | | |
|---|---|---|---|
| 20. | எஸ்.ரவீந்திரன் | ஊடகப்பணியாளர் | பெப்ரவரி 12 |
| 21. | சுப்ரமணியம் இராமச்சந்திரன் | ஊடகப்பணியாளர் | பெப்ரவரி 15 |
| 22. | சந்திரபோஸ் சுதாகர் | ஊடகப்பணியாளா | ஏப்ரல் 16 |
| 23. | செல்வராசா ரஜிவர்மன் | ஊடகவியலாளர் | ஏப்ரல் 29 |
| 24. | சகாதேவன் நிலக்ஸன் | ஊடகவியலாளர் | ஓகஸ்ட் 01 |
| 25. | அந்தோனிப்பிள்ளை செரின் சித்தராஞ்சன் | ஊடகவியலாளன் | நவம்பர் 05 |
| 26. | வடிவேல் நிமலராஜ் | ஊடகப்பணியாளர் | நவம்பர் 17 |
| 27. | இசைவிழி செம்பியன் (சுபாஜினி) | ஊடகவியலாளர் | நவம்பர் 27 |
| 28. | சுரேஸ் லிம்பியோ | ஊடகப்பணியாளர் | நவம்பர் 27 |
| 29. | ரி.தர்மலிங்கம் | ஊடகப்பணியாளர் | நவம்பர் 27 |

**2008**

| | | | |
|---|---|---|---|
| 30. | பரநிருபசிங்கம் தேவகுமார் | ஊடகவியலாளர் | மே 28 |
| 31. | றஷ்மி முஹமட் | ஊடகவியலாளர் | ஒக்ரோபர் 06 |

**2009**

| | | | |
|---|---|---|---|
| 32. | லசந்த விக்ரமதுங்க | ஆசிரியர் | ஜனவரி 08 |
| 33. | புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி | ஊடகவியலாளர் | பெப்ரவரி 12 |
| 34. | சசி மதன் | ஊடகப்பணியாளர் | மார்ச் 06 |